சாராத உதவியாளர் பதவியும், மதுரை மருத்துவக் கல்லூரியில் காலியாகவுள்ளனவா?

(இ) ஆம் எனில், எவ்வளவு காலமாக அவை காலியாக வுள்ளன?

(உ) அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ): இக்கேள்வி 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாளன்று கேட்கப் பட்டது. மருந்து ஆக்க இயல் ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர் பதவியும், மருந்துப் பொருளியல் பேராசியருக்கு மருத்துவச் சார் பற்ற உதவியாளர் பதவியும் அந்த தேதியில் காலியாக இல்லை. மருந்து ஆக்க இயல் ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர் (Assistant Reader in Pharmaceutics) பதவி 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் முதல் காலியாக இருந்தது. அது 1972-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9-ம் நாளன்று நிரப்பப்பட்டது.

(உ) நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு அப்பதவிக்குரியவரை முன்னதாக நியமிக்க இயலவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் பார்மசி படிப்பை மூடிவிட்டு எல்லாவற்றையும் மதுரைக்குக் கொண்டுபோகிற காரணத்தால், பார்மசித் துறையின் பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் ஆகியவர்களின் பதவிகள் குறையுமா என்று அமைச்சர் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முதல் கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழுவில்லை. ஒரு மருந்தில் இன்னொரு மருந்தைக் கலக்கக் கூடாது. (சிரிப்பு)

Cattle Dung Cakes

* 133 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of drying of cattle dung cakes on the roads in Madras City; and

(b) if so, the steps taken to prevent this nuisance?

1972 ஆகஸ்ட் 21]

மாட்டுச் சாண வரட்டிகள்

* திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி) சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரச் சாலைகளில் மாட்டுச் சாண வரட்டி களைக் காய வைப்பது பற்றி அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இத்தொல்லையைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை நகரின் தெருக்களில் உள்ள கால்நடை சாண வரட்டிகளை அகற்றத் தேவையான நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி எடுத்துவருகின்றது.

Family Planning Drive for Women

* 134 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state whether separate wings are to be started for women for Family Planning Drive in this State?

மகளிர் குடும்பநலத் திட்டத்தை விரைவு படுத்துதல்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டத்தை விரைவு படுத்த மகளிர்க்கென தனியான பிரிவுகள் தொடங்கப்படவிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

T.B. Sanatorium, Sengipatti

* 135 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti, Thanjavur district is working on a deficit;

(*b*) if so, the net deficit for the year 1970–71; and

(*c*) the amount sanctioned by the Government to reimburse the same?